புரட்சிப்
# பெரியார் முழக்கம்
www.dvkperiyar.com



திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2057 • ஏப்ரல் (April) 30, 2026 • புரட்சி 26 • முழக்கம்(ISSUE) 17 • விலை(PRICE) ரூ.6.00

# கழகத் தோழர்கள் வாக்கு சேகரிப்பு!

**நடந்து முடிந்த தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக தமிழ்நாடு முழுவதும் தேர்தல் பரப்புரையில் தோழர்கள் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர்.**

திருப்பூர், அவினாசி, கோவை, பொள்ளாச்சி, ஈரோடு, மொடக்குறிச்சி, சேலம் (மேட்டூர், எடப்பாடி) புதுக்கோட்டை, பெரம்பலூர், கடலூர் (திண்டிவனம்), புதுச்சேரி, சென்னை (மயிலாப்பூர், ஆயிரம் விளக்கு, தியாகராயர் நகர், சைதை, பெரம்பூர், வில்லிவாக்கம், ஆர்.கே நகர், எழும்பூர்), காஞ்சிபுரம், உத்திரமேரூர், வேலூர், குடியாத்தம், கே.வி குப்பம், மயிலாடுதுறை ஆகிய பகுதிகளில் தோழர்களே நட்சத்திர பேச்சளார்களாக வலம் வந்தனர்.

தமிழ்நாட்டில் பாஜகவை காலூன்ற விடக்கூடாது என்ற நோக்கத்தில் முற்போக்கு அமைப்புகளின் ஒருங்கிணைப்பில் Zero BJP என்ற பெயரில் பாஜக போட்டியிடும் தொகுதிகளான திருச்செந்தூர், பத்மநாபபுரம், விளவங்கோடு, கிள்ளியூர், நாகர்கோவில் ஆகிய தொகுதிகளில் கிராமங்கள்தோறும் பாஜக எதிர்ப்பு பிரச்சாரத்தைத் தோழர்கள் மேற்கொண்டனர்.

## பாஜகவை வீழ்த்த களமிறங்கிய கழகத் தோழர்கள்!

30-க்கும் மேற்பட்ட கிராமங்களில் பாஜக ஏன் ஆட்சிக்கு வரகூடாது என்பதை பற்றியும், திமுக 2.0 ஆட்சியின் தேவையையும் எடுத்துரைத்தனர். கழகப் பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன் தலைமையில் தோழர்கள் சந்திரசேகர் (தூத்துக்குடி பொருளாளர்), மாத்தூர் நீதியரசர் (குமரி மாவட்டச் செயலாளர்), மாசிலாமணி (தென்காசி மாவட்டத் தலைவர்), அண்டன் தமிழரசன், கார்த்திக் ஆகியோர் 12 நாட்கள் தொடர் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டனர்.

கழகத் தலைவர் மேட்டூர், அவினாசி ஆகிய தொகுதிகளில் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். கழகப் பொதுச் செயலாளர் காணொளி வழியாக மருத்துவர் எழிலன் அவர்களுக்கு ஆதரவுப் பரப்புரையை மேற்கொண்டார். இணையதளத்தில் திமுக ஆதரவு பரப்புரையை செய்து வந்தார்.

பொள்ளாச்சி, வால்பாறை பகுதிகளில் கழகத் தோழர் வெள்ளியங்கிரி தலைமையில் தோழர்கள் திமுக கூட்டணியை ஆதரித்து வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

மருத்துவர் எழிலன் அவர்களுக்கு ஆதரவாக காஞ்சிபுரம் ரவி பாரதி, வேலூர் சிவா ஆகியோர் தலைமையில் தோழர்கள் தொடர் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

குமாரபாளையம் சுற்றுவட்டார பகுதியான காவிரி நகர், உழவர் சந்தை உடையார்பேட்டை, நாராயண நகர், அம்மன் நகர், மேற்கு காலனி, பள்ளிபாளையம் பிரிவு சாலை, எம்ஜிஆர் நகர் போன்ற பகுதிகளில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் எஸ்.பாலு அவர்களுக்கு ஆதரவாக வாக்கு சேகரிப்பில் நாமக்கல் மாவட்டக் கழகத் தோழர்கள் ஈடுபட்டனர்.

நாமக்கல் மாவட்டக் கழகத்தின் சார்பில் மீ.த தண்டபாணி (நகரத் தலைவர்) முன்னெடுப்பில் செ.வடிவேலு (நகரச் செயலாளர்), கேப்டன் அண்ணாதுரை (தலைமைக் குழு உறுப்பினர்), மு.சாமிநாதன் (மாவட்டத் தலைவர்), தோழர்கள் மோகன், மாதேஸ்வரன், தேவி, மணிராஜ், மணியம்மை, சந்திரா, செல்வராசு விசிக பிரபு, தி.க மாவட்டத் தலைவர் சு.சரவணன், குமார், மதசார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சியினர் ஆகியோர் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர். தொடர்ந்து பத்து நாட்கள் மாலை நேரத்தில் பிரச்சாரம் செய்யப்பட்டது.

எந்தவித பொருளாதார வசதிகளையும் எதிர்பாராமல் தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக கழகத் தோழர்கள் கடும் வெயிலிலும் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

## உதயநிதிக்கு கழகம் சார்பில் வரவேற்பு!

ஏப்ரல்-20, மாலை 6 மணிக்கு, சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதிக்கு, பிரச்சாரம் செய்ய வருகை தந்த உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு, இராயப்பேட்டை வெங்கடாசலம் தெருவில், பல கட்சிகள் இணைந்து வரவேற்பு அளித்தனர். துணை முதல்வர் முன்னிலையில், திமுக - திவிகவினர் இணைந்து, பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து கொள்கை முழக்கமிட்டனர்.

வி.எம் தெருவின் பெயரை, பெரியார் தொண்டர் **"பத்ரி நாராயணன் தெரு"** என்று மாற்றியமைக்க, பொதுமக்களிடம் நூற்றுக்கணக்கான கையெழுத்து பெற்ற கோரிக்கை மனு, சென்னை மாவட்டக் கழகம் சார்பில் வழங்கப்பட்டது.




மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில், க.வே. மோகன் தலைமையிலான வட்டக்கழக திமுகவினர் ஒருங்கிணைத்த நிகழ்வில், கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், தலைமைக் குழு உறுப்பினர் கு. அன்பு தனசேகர், மாவட்டத் தலைவர் மா. வேழவேந்தன், மாவட்ட அமைப்பாளர் ம.கி. எட்வின் பிரபாகரன், இணையதளப் பொறுப்பாளர் விஜய் குமார், மாவட்டத் துணைச் செயலாளர் இராவணன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ப. அருண், திருவல்லிக்கேணி பகுதிச் செயலாளர் சே. ராஜேஷ், தோழர்கள் ஸ்ரீலேகா, புகழேந்தி, சுகுமார், குகன், அன்பரசு, பாரி சிவா, மயிலை சிவா, சுரேந்தர், செந்தில், தமிழ்ச்செல்வன், தாமரை, எம்ஜிஆர் நகர் துரை, அன்பரசன், தீபக், லட்சுமணன், ஜெயந்தி, யாழினி, புருஷோத்தமன், முரளிகிருஷ்ணன், பிரபாகரன்,



பிரகாஷ் மாஸ்டர், லீலா, நிரஞ்சன், மயிலை மனோகர், முழக்கம் உமாபதி, சேலம் இளவரசன், குடிஅரசு, ராஜன், ஆர்த்தி, ராஜா உள்ளிட்ட பல தோழர்கள் பங்கேற்றனர்.

தேர்தல் பணிமனையை பார்வையிட வந்த உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி அவர்களை சந்தித்தபோது கழகத்தின் செயல்பாடுகளை பாராட்டினார்.

## கன்னியாகுமரி மாவட்டக் கழக கலந்துரையாடல் கூட்டம்!

குமரி மாவட்டக் கழக கலந்துரையாடல் கூட்டம் 05.04.2026 ஞாயிறு அன்று மாலை 03.00 மணியளவில் தக்கலை ஓய்வு பெற்ற அரசு ஊழியர் சங்க அலுவலகத்தில் நடைபெற்றது. கலந்துரையாடல் கூட்டத்திற்கு கழக பரப்புரைச் செயலாளர் தூத்துக்குடி பால். பிரபாகரன் தலைமை வகித்தார். குமரி மாவட்டக் கழகச் செயலாளர் நீதியரசர் முன்னிலை வகித்தார். கலந்துரையாடல் கூட்டத்தில் எதிர்வரும் ஏப்ரல் 23, தமிழ்நாடு சட்ட தேர்தலில் கழகத் தலைமைக்குழு எடுத்த தீர்மானத்தின் படி குமரி மாவட்டத்தில் எப்படி களப்பணியற்றுவது என கலந்துரையாடப்பட்டது. நிகழ்வில் மஞ்சுகுமார், நாஞ்சில் சூசையப்பா, தமிழ்மதி, அணைக்கரை பால் வண்ணன், ரமேஷ் பாபு அன்டன் பாலசிங்கம், ரெவி ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்வில் கீழ்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கழகம் எடுத்துள்ள தேர்தல் நிலைபாட்டின்படி குமரி மாவட்டத்தில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்ய களப்பணியாற்றுவது என்றும் குறிப்பாக பா.ஜ.க. போட்டியிடும் தொகுதிகளில் முழுகவனம் செலுத்தி பா.ஜ.க. இல்லாத குமரி மாவட்டம் என்ற நிலை உருவாகிட கடின உழைப்பை தருவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

## கை விலங்கிலிருந்து கருப்பு அங்கி வரை!

கை விலங்கோடு குற்றம் சாட்டப்பட்டவராக நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்ட பேரறிவாளன், அதே நீதிமன்றத்தில் வழக்கறிஞராக படியேறுகிறார். ராசீவ் கொலையில் குற்றவாளியாக அபாண்டமாக குற்றம் சாட்டப்பட்டு 31 ஆண்டுகள் சிறைவாசத்தை ஏற்றவர் பேரறிவாளன். நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டவராக நிறுத்தப்பட்டார். பூந்தமல்லியிலும் வேலூரிலும் பிறகு சென்னையிலும் அவர் சிறைவாசம் தொடர்ந்தது.

சிறைக்குள் இருந்து கொண்டே மன உறுதியோடு சட்டப் போராட்டம் நடத்தினார். மரண தண்டனை அறிவிக்கப்பட்டது; மரண தண்டனைக்கு எதிராக மக்கள் இயக்கம் தமிழ்நாட்டில் நடந்தது. எழுவர் விடுதலைக்கான தொடர் பரப்புரைகள், கருத்தரங்குகள், மாநாடுகள், போராட்டங்கள் தமிழ்நாடு முழுதும் தீவிரமாக நடந்தன. மரண தண்டனையை எதிர்த்து தனக்கு மரண தண்டனையைத் தந்து கொண்டார் செங்கொடி என்ற வீரப்பெண்.



மரண தண்டனைக்கு எதிராக உலகில் தமிழ்நாட்டில் நடந்தது போல் வேறு எந்தப் பகுதியிலும் இயக்கங்கள் நடந்த வரலாறு இல்லை. இந்த மக்கள் இயக்கம் தீர்ப்பு வழங்கிய நீதிபதிகளையும், புலன் விசாரணை செய்த தலைமை இயக்குனரையும், வாக்குமூலம் வாங்கிய புலனாய்வுத்துறை அதிகாரியையும் தங்கள் கருத்துக்களை மாற்றிக் கொள்ளும் கட்டாயத்தை உருவாக்கியது. சட்டங்களின் சக்தியை விட மக்கள் சக்தி வலிமையானது என்பதை தமிழ்நாடு நிரூபித்தது.

ஒவ்வொரு கட்டத்திலும் தன் மீதான வழக்குகள் அதிலிருந்து விடுபடுவதற்கு மேற்கொள்ள வேண்டிய சட்ட நடவடிக்கைகளை சட்டம் படித்திராத பேரறிவாளன் சிறைக்குள் இருந்து திட்டமிட்டு காய் நகர்த்தினார். அவருக்கான வழக்கறிஞர் படை தன்னலமற்ற துடிப்புடன் வெளியே இயங்கியது. தமிழ்நாட்டில் திமுக ஆட்சி அதிகாரத்துக்கு வந்தவுடன் இதில் முனைப்பு காட்டியது.

உச்சநீதிமன்றத்தில் 7பேர் விடுதலைக்கு பிரபலமான வழக்கறிஞர்களை கொண்டு வாதாடியது. ஒரு கட்டத்தில் நீதிபதிகளே நியாயங்களை உணர்ந்தனர். நீதிபதிக்கு உரிய சிறப்பு அதிகாரங்களைப் பயன்படுத்தி விடுதலையை அறிவித்தனர்.

ஒரு வழக்கறிஞராக இல்லாமல் சட்ட நுணுக்கங்களை சுயமாக படித்து தன்னை வளர்த்துக் கொண்ட பேரறிவாளன், விடுதலை ஆன பிறகு சட்டம் படிக்கத் தொடங்கினார். சட்டப் படிப்பிலும் சிறந்த மதிப்பெண்களோடு தேர்ச்சி பெற்றார். மனித உரிமைக்காக வாதாட வழக்கறிஞராக இப்போது தன்னைப் பதிவு செய்து கொண்டிருக்கிறார். தனக்கு கிடைத்த சட்ட நீதி மக்களுக்கு கிடைக்க வேண்டும் என்ற அவரது உள்ளத்தில் பதிந்து கிடந்த இலட்சியத்தில் அவர் வென்று காட்டியிருக்கிறார். இந்திய நீதித்துறை வரலாற்றில் தூக்குத் தண்டனைக்கு உள்ளான ஒரு இளைஞர், அதிலிருந்து விடுதலையாகி வழக்கறிஞராக வந்திருக்கும் பெருமை இந்த பெரியார் மண்ணுக்கு கிடைத்திருக்கிறது. வாழ்த்துகள் அறிவு!

இரா.

# ஈழ விடுதலைக் கவிஞர் விடைபெற்றார்!

தேனிசை செல்லப்பா எனும் இசைப் போராளி விடை பெற்றுக் கொண்டு விட்டார். தமிழீழ விடுதலை வரலாற்றில் தேனிசை செல்லப்பாவுக்கு நிலைத்த இடம் உண்டு. தமிழ்நாட்டு விடுதலை இலட்சியத்தை முன்னிறுத்தி ‘தினத்தந்தி ’ நாளேட்டின் நிறுவனர் சி.பா ஆதித்தனார் தொடங்கிய ‘நாம் தமிழர் கட்சி’யிலிருந்து அவரது அரசியல் பயணம் தொடங்கியது. தனிநாடு விடுதலையில் தோய்ந்து நின்றவர். அந்த இலட்சியம்தான் அவரை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை நோக்கி நகர்த்தியது.



1983-இல் தமிழ்நாட்டில் தமிழீழ விடுதலை உணர்வுகள் வெடித்து கிளம்பிய போது தேனிசை செல்லப்பாவின் இசை நாடா வெளிச்சத்துக்கு வந்தது. நாம் தமிழர் இயக்கத்தில் தன்னை இணைத்து கொண்டிருந்த கவிஞர் காசி. ஆனந்தன் எழுதிய உணர்ச்சிமிகு கவிதை வரிகளுக்கு இசை வடிவம் தந்திருந்தார் தேனிசை செல்லப்பா.

தமிழ்நாடு முழுதும் தமிழ் ஈழ விடுதலை ஆதரவாளர்கள் நடத்திய தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான இயக்கங்களில் குறிப்பாக பெரியார் இயக்கங்களில் அவரது இசை நிகழ்ச்சிகள் உணர்வலைகளைத் தட்டி எழுப்பின. பெரியார் திராவிடர் கழகம், திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய ஈழ விடுதலை ஆதரவு பரப்புரைகள், மாநாடுகளில் தேனிசை செல்லப்பா இசை நிகழ்ச்சிகள் நிச்சயம் இடம் பெற்றிருக்கும். திராவிடர் கழகத்தில் நாங்கள் இருந்தபோது கவிஞர்.காளமேகம் மற்றும் உணர்வுள்ள இளைஞர்கள் இணைந்து “ஈழத்து தமிழ் மன்னன் சங்கிலியன், சங்கிலியன் வரலாறு மற்றும் தீர்வுக்காக..” போன்ற நாடகங்களை நாங்கள் அரங்கேற்றினோம். கவிஞர் காளமேகம் எழுதிய பாடல்களுக்கு இசையமைத்து தேனிசை செல்லப்பா தான் பாடினார். பெண்ணுரிமை, பகுத்தறிவு, இன விடுதலை கருத்துக்கள் கொண்ட பாடல்களையும் எடுத்து பாடி ஒலிநாடாகவாக வெளிவந்திருக்கிறது.

ஈழ விடுதலை ஆதரவு இயக்கத்தில் அவரது மகத்தான பங்களிப்பை அறிந்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அவரை அரவணைத்துக் கொண்டது. தமிழீழம் சென்று இசை நிகழ்ச்சிகளை நடத்தினார். தமிழீழ விடுதலை இயக்கத் தலைவர் மாவீரர் பிரபாகரன் அவர்களால் மிகவும் நேசிக்கப்பட்டவர் தேனிசை செல்லப்பா. வெகுசிலருக்கு மட்டுமே விடுதலைப் புலிகள் இயக்கம் வழங்கிய ‘மாமனிதர்’ விருதை மேதகு.பிரபாகரன் செல்லப்பாவுக்கு விழா எடுத்து வழங்கினார். விடுதலைப் புலிகள் இயக்கம் செயல்பட்ட இலண்டன், பாரிஸ், ஜெர்மனி, சுவிட்சர்லாந்து உள்ளிட்ட பல நாடுகளுக்கு தேனிசை செல்லப்பா அழைக்கப்பட்டார். புலிகள் இயக்கத்திற்கு நிதி திரட்டுவதற்கு அவரது இசை நிகழ்ச்சிகள் நடந்தன. களத்தில் நிற்கும் விடுதலைப் புலிகளுக்கு உற்சாகத்தையும் உத்வேகத்தையும் தந்தது தேனிசை செல்லப்பாவின் பாடல்கள்தான்.

புலிகள் பயணிக்கும் வாகனங்களில் எப்போதும் தேனிசை செல்லப்பாவின் பாடல்கள் ஒலிக்கும். விடுதலைப் புலிகள் நடத்திய வானொலியில் நேயர் விருப்பமாக தேனிசை செல்லப்பாவின் பாடல்கள் ஒலிபரப்பியதையும் நான் தமிழீழம் சென்ற போது நேரில் பார்த்தேன். ஒரு நிகழ்வு நினைவுக்கு வருகிறது. தமிழீழ விடுதலைக்காக திராவிடர் கழகம் ஒரு இசைநாடாவை உருவாக்க திட்டமிட்டது. கவிஞர்கள் கலி.பூங்குன்றன், காசி.ஆனந்தன், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், புலமைப்பித்தன் எழுதிய பாடல்களுக்கு தேனிசை செல்லப்பா குழுவினர் பாடினர். தோழர் சாமி என்ற இசையமைப்பாளர் மெட்டுகளை உருவாக்கினார். வடபழனியில் உள்ள ஒரு ஒலிப்பதிவு கூடத்தில் இந்த இசை நாடா பதிவு மாலை தொடங்கி இரவு முழுதும் விடியவிடிய நடந்தது. அந்தப் பதிவின் போது கவிஞர் கலி.பூங்குன்றன், காசி.ஆனந்தன், வீரசந்தானம் அவர்களோடு நானும் பங்கேற்றேன். கடைசியாக ஒலிநாடாவுக்கு கூடுதலாக ஒரு பாடல் தேவைப்பட்டது; அவசர அவசரமாக பாடல் தேடல் நடந்தது. அப்போது ‘முரசொலி’ நாளேட்டில் கவிஞர்.காசி ஆனந்தன் எழுதிய ஒரு கவிதையை பாடலாக்க முடிவு செய்யப்பட்டது. "நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்" என்பதே அந்தப் பாடல். 30 நிமிடங்களில் இசை அமைத்து அந்தப் பாடல் உருவானது. ஒலிப்பதிவு நாடா தயாரான அடுத்த நாள் அந்த நாடாவை புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவர் பேபி சுப்பிரமணியத்துடன் நானும் தோழர்களும் சென்னை பட்டினப்பாக்கத்தில் தங்கி இருந்த மேதகு. பிரபாகரன் அவர்களை நேரில் சந்தித்து அளித்தோம். பாடல்கள் அனைத்தையும் கேட்டவர் “நம்புங்கள் தமிழீழம்” பாடல்தான் தன்னை மிகவும் ஈர்த்தது; நம்பிக்கை தரும் பாடல் என்றார். அது முதல் தமிழீழ தேசியப் பாடலாக அது கருதப்பட்டு ஒவ்வொரு நிகழ்விலும் நிறைவுப் பாடலாக மக்களின் கைத்தட்டலுடன் தேனிசை செல்லப்பா அந்தப் பாடலை பாடி வந்தார். தொடர்ந்து ஈழ விடுதலைக்காக ஏராளமான பாடல்களை ஒலி நாடாக்களாக அவர் உருவாக்கி வந்தார். முறையாக இசை பயின்ற இசை மேதைகள் நாட்டில் ஏராளம் இருக்கிறார்கள். அவர்களின் மேட்டிமை இசை மக்களுக்கானது அல்ல! ஆனால் தன்னிடம் இருந்த இயல்பான பாடும் திறனை ஒரு இலட்சியத்திற்காக அர்ப்பணித்த கலைஞர்கள் அந்த இசை மேதைகளை விட உயர்வானவர்கள். இந்த வரிசையில்தான் தடம்பதித்து நிற்கிறார் தேனிசை செல்லப்பா.

ஒன்றிய அரசு அவரது கடவுச்சீட்டை (பாஸ்போர்ட்) முடக்கி பயணங்களைத் தடுத்தது. நீண்ட சட்டப் போராட்டத்திற்கு பிறகு அவர் திரும்பப் பெற்றார். தமிழ்நாடு அரசால் பாவேந்தர் விருது வழங்கி கவுரவிக்கப்பட்டது. ஒரு சொட்டுத் தண்ணீர் கூட அருந்தாமல் பட்டினிப் போராட்டம் நடத்திய மாவீரன் திலீபன் தனது போராட்டத்தின் போது தேனிசை செல்லப்பா பாடல்களை கேட்க விரும்பினார். ஆனால் அவரது பயணம் தடைப்பட்டு விட்டது. தேனிசை செல்லப்பாவின் கம்பீரக் குரலில் ஒலித்த "பெண்ணே பெண்ணே போராடு!" " ஜாதி ஜாதி என்று தாழ்ந்து போனவன்!" என்ற கவிஞர் காளமேகத்தின் வரிகளில் ஒலித்த பாடல் இப்போதும் உயிர்த்துடிப்போடு நமது காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. பெரும் புகழோடு விடைபெற்ற தேனிசை செல்லப்பாவுக்கு திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் புகழ்வணக்கம்!

**- விடுதலை இராசேந்திரன்**

# பூணூலைக் காப்பாற்றத் துடிக்கும் உயர்நீதிமன்றம்!

*கர்நாடகாவில் இன்ஜினியரிங், விவசாயம் உள்ளிட்ட படிப்புகளில் சேர மாணவர்களுக்கு, சி.இ.டி., என்ற, பொது நுழைவுத்தேர்வு நடந்தது. இந்த தேர்வுக்காக பெங்களூரு மடிவாளாவில் உள்ள கிருபாநிதி கல்லூரியிலும் தேர்வு மையம் அமைக்கப்பட்டு இருந்தது. தேர்வு எழுதச் சென்ற மாணவ, மாணவியர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அப்போது, ஆனந்த் சுதிர் ராவ் உள்ளிட்ட ஐந்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் பூணூல் அணிந்திருந்தது தெரிய வந்தது. அவர்களிடம் பூணூலை அகற்றி விட்டு தேர்வு எழுத செல்லும்படி, கல்லூரி ஊழியர்கள் சுதாகர், கிரிஜம்மா, சரிதா ஆகியோர் கூறியுள்ளனர்.*

*‘ஐந்து மாணவர்களும் பூணூல் தங்களது சம்பிரதாயம்; அதனை அகற்ற முடியாது’ என்று கூறியும் ஊழியர்கள் கேட்கவில்லை. பூணூலை அகற்றினால் தான் தேர்வு எழுத அனுமதிப்போம் என்று கறாராக கூறியுள்ளனர். இதனால், வேறு வழியின்றி ஐந்து மாணவர்களும் பூணூலை அகற்றி விட்டு தேர்வு எழுதச் சென்றனர்.*

*● தேர்வு முடிந்து வீட்டிற்கு சென்றதும் பூணூலை அகற்றியது பற்றி, பெற்றோரிடம் கூறினர். அதனைக் கேட்டு அதிர்ச்சி அடைந்த பெற்றோர், கிருபாநிதி கல்லூரி முன் கூடினர். அவர்களுடன் ஹிந்து அமைப்பினரும் ஒன்று கூடி கல்லூரி நிர்வாகம், அரசுக்கு எதிராக முழக்கங்கள் எழுப்பி போராட்டம் நடத்தினர்.*




*கடந்த ஆண்டும் சி.இ.டி., தேர்வு நடந்த போது, பீதர், சிவமொக்காவில் இரண்டு மாணவர்களின் பூணூல் அகற்றப்பட்டது சர்ச்சையானது.*

*இந்த விவகாரம் உயர் நீதிமன்றம் வரை சென்றது. பூணூலை அகற்ற மாணவர்களுக்கு உத்தரவிடக்கூடாது என்று நீதிமன்றம் உத்தரவிட்டு இருந்தது. அந்த உத்தரவையும் மீறி, தற்போது ஐந்து மாணவர்கள் பூணூல் அகற்றப்பட்டது பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த விவகாரம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்த போலீசார், கல்லூரி ஊழியர்கள் சுதாகர், கிரிஜம்மா, சரிதாவை கைது செய்து விசாரிக்கின்றனர். மாணவர்களின் பூணூலை அகற்ற வற்புறுத்திய மூன்று பேராசிரியர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர்.பூணூல் அணிவதன் நோக்கம் பிராமணர் அல்லாதவர்களை சூத்திரர்கள். அதாவது பார்ப்பனருக்கு கீழ்சேவை செய்யும் இழிமக்கள் என்பதை உணர்த்துவதுதான். தடைசெய்யப்பட வேண்டியது பூணூலே தவிர, பூணூல் நீக்கம் அல்ல!*

# பாஜகவின் உண்மை முகம் அம்பலம்!

*தேர்தல் முடிந்தவுடன் பாஜக தனது உண்மையான முகத்தை காட்டத் துவங்கி இருக்கிறது.*

*● புதுச்சேரியில் சி.பி.எஸ்.இ பள்ளிகளில் ஏற்கனவே மும்மொழிக் கொள்கையை முதல்வர் ரங்கசாமி அனுமதித்து விட்டார். மூன்றாவது மொழியாக இந்தியும் படிக்கலாம் ; பிரெஞ்சும் படிக்கலாம் என்ற நிலை இருந்தது; இப்போது ஆறாம் வகுப்பில் இருந்து இந்தி கட்டாயம் என்றும், ஒரு வாரத்திற்குள் இதை அமல்படுத்த வேண்டும் என்றும் ஒன்றிய அரசு உத்தரவிட்டதோடு பிரெஞ்சு மொழியும் படிக்கலாம் என்ற வாய்ப்பை பறித்து விட்டது.*

*● இந்திய ரயில்வேயில் 29,608 வேலை வாய்ப்புகளை குறைப்பதாக ஒன்றிய ஆட்சி அறிவித்துள்ளது. இதனால் தெற்கு ரயில்வேயில் 2,000 பணியாளர்கள் பணிநீக்கம் செய்யப்பட இருக்கிறார்கள்.*

*● மற்றொரு மாநில உரிமை பறிப்பு அறிவிப்பு வந்திருக்கிறது. இந்தியாவில் உள்ள ஒன்றிய அரசுக்கு சொந்தமான அனல் மற்றும் அணு மின் நிலையங்களில் உற்பத்தியாகும் மின்சாரத்தின் பெரும் பகுதியை அந்த மின் நிலையங்கள் அமைந்துள்ள மாநில அரசுகளுக்கே குறைந்த விலையில் வழங்கப்பட்டு வந்த நிலையை திடீரென்று ஒன்றிய ஆட்சி மாற்றி உள்ளது.*

*உற்பத்தி செய்யப்படும் ஒட்டுமொத்த மின்சாரத்தையும் போட்டி ஏல முறையில் விலை நிர்ணயம் செய்து விற்பனை செய்ய முடிவெடுத்துள்ளார்கள். இந்தப் போட்டி ஏலமுறையால் பல மடங்கு கூடுதல் விலை கொடுத்து தமிழ்நாடு அரசு மின்சாரத்தை வாங்க வேண்டிய கட்டாயம் உருவாகியுள்ளது. நேற்று வரை மோடிக்கு பல்லக்கு தூக்கிய அன்புமணியே இன்று இதற்கு கண்டனம் தெரிவித்திருக்கிறார். தமிழ்நாட்டின் நலன்களை மோடி பார்த்துக் கொள்வார் என்று பேசி வந்த சரணாகதி எடப்பாடி இப்போதும் இந்த முக்கிய பிரச்சினைகளில் முதலாளியிடம் கைகட்டி வாய் பொத்தி நிற்கிறார்.*

விடுதலை இராசேந்திரன்
*27.04.2026*

# கடல்தாண்டும் ‘பிராமணர்கள்’ அர்ச்சகர்களாக முடியாது –உயர்நீதிமன்றம்!

*ஆகம சாஸ்திர விதிகள், சிருங்கேரி சாரதா பீட வழிகாட்டுதல்கள் மற்றும் கடந்த காலத்தில் மாநில அறநிலையத்துறையால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை ஆகியவற்றை கடுமையாக அமல்படுத்த உத்தரவிடக்கோரி ஆந்திர உயர் நீதிமன்றத்தில் பொது நல வழக்கு தொடரப்பட்டது. இதை உயர்நீதிமன்ற நீதிபதி நிம்மகடா வெங்கடேஸ்வரலு விசாரித்தார். அப்போது, மனுதாரர் தரப்பில், விதிகளின்படி அர்ச்சகர்கள் வெளிநாடு செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. அவர்கள் அவசர தேவைக்காக சென்றாலும், திரும்பி வந்தவுடன் கருவறையில் பூஜைகள் செய்யும் உரிமையை இழந்துவிடுவார்கள் என்றார். சிருங்கேரி பீடத்தின் விதிமுறையின்படி, மூன்று நாள் சந்தியா வந்தனத்தை கடைபிடிப்பவர்கள், வேதங்களை படிப்பவர்கள், குருவின் மந்திரங்களை உச்சரிப்பவர்கள் மற்றும் கடுமையான உணவு விதிகளை பின்பற்றுபவர்கள் மட்டுமே கருவறையில் பூஜைகள் செய்ய தகுதியுடையவர்கள். பாரம்பரியத்திற்கு மாறாக வெளிநாடு சென்று, சவரம் செய்து, தலைமுடியை வெட்டிக் கொண்டவர்களும் தகுதியற்றவர்கள் என்று நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.*

*வாதங்களை கேட்டறிந்த நீதிபதி அமர்வு, இந்த வழிகாட்டுதல்களை செயல்படுத்துமாறு அறநிலையத் துறையின் முதன்மைச் செயலாளர் மற்றும் ஆணையருக்கு நேற்று முன்தினம் உத்தரவிட்டது. இதன்மூலம், மாநிலத்தில் உள்ள கோயில்களில் வெளிநாடு சென்று வந்த அர்ச்சகர்கள் கோயில் கருவறைக்குள் பூஜைகளை செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. பிராமணர்கள் கடல்தாண்டக்கூடாது என்பது சனாதனம். இப்போது பார்ப்பனர்கள் கடல்தாண்டி சென்று அங்கே பார்ப்பனியத்தை பரப்புகிறார்கள்.*

# நூற்றாண்டு அநீதியை ஒழித்த பெரியார் இயக்கம்!

**வரலாற்றுப் பதிவுகள் இல்லாத எத்தனையோ போராட்டங்களை பெரியார் இயக்கம் நடத்தி இருக்கிறது. உள்ளூர் மட்டத்தில் நடந்த அந்த சமூகப் புரட்சிகளை, கருஞ்சட்டை வீரர்களை வெளிச்சப்படுத்தும் கட்டுரைத் தொடரை முரசொலியில் ஊடகவியலாளர் ர.பிரகாசு எழுதி வருகிறார். அன்னூர் நல்லிச்செட்டிபாளையத்தில் நடந்த போராட்டம் குறித்த கட்டுரை.**

கோவை மாவட்டம், அன்னூர் ஒன்றியத்தில் உள்ள சுற்றுவட்ட கிராமங்களில் ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக எண்ணற்ற தீண்டாமைக் கொடுமைகள் நிலவி வந்தன. பொதுக்குழாயில் தாழ்த்தப்பட்ட மக்கள் குடிநீர் பிடிக்கத் தடை, செல்போன் பேசத் தடை, இரட்டைக் குவளை முறை, சலூன்களில் தாழ்த்தப்பட்டோருக்கு முடிவெட்டத் தடை, பொது சுடுகாட்டில் தாழ்த்தப்பட்டோரை புதைக்கத் தடை, மோட்டார் பைக் ஓட்டத் தடை என விதவிதமான தீண்டாமைக் கொடுமைகளுக்கு அப்பகுதி மக்கள் ஆளாகியிருந்தனர்.

2000-க்குப் பிந்தைய நவீன உலகிலும்கூட இத்தகைய ஜாதியக் கொடுமைகள் தலைவிரித்தாடுவதை சகித்துக்கொள்ள முடியாமல், இவற்றுக்கெதிராகப் போராட வேண்டுமென்ற எண்ணம் அங்குள்ள நல்லிசெட்டிபாளையம் பகுதி இளைஞர்களுக்கு ஏற்பட்டது. ஈஸ்வரன், ஜோதிராம், ராமன் மற்றும் சில இளைஞர்கள் இணைந்து தங்கள்மீது திணிக்கப்படும் ஜாதிய அநீதிகளைத் துடைத்தெறிய, 2009-இல் பெரியார் திராவிடர் கழகத்தில் தங்களை இணைத்துக்கொண்டனர். ஊரின் ஒரு பகுதியில் இடைநிலை சமூகத்தினரும் மற்றொரு பகுதியில் தாழ்த்தப்பட்ட மக்களும் வசித்து வருகின்றனர். பெரியார் திராவிடர் கழகத்தில் இணைந்து பிறகு ஜாதிய அடக்குமுறைகளுக்கு எதிராக மக்களை அணி திரட்டினர். தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் பகுதியைப் **‘பெரியார் நகர்’** என்று அழைக்கத் தொடங்கினர். கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினர். மூடநம்பிக்கைகளில் இருந்து மக்களை வெளியேற்றி பகுத்தறிவுச் சிந்தனைகளை வளர்க்கத் தொடங்கினர். சுற்றுப்புறங்களில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் பகுதிகளிலும் பகுத்தறிவுச் சிந்தனைகளும் சுயமரியாதை எண்ணமும் வேர்விட்டுப் படரத் தொடங்கியது.




அதன் மாற்றங்கள் அடுத்த இரண்டு ஆண்டுகளிலேயே வெளிப்படத் தொடங்கியது. குறிப்பாக, அன்னூர் ஒன்றியத்தில் நிலவும் தீண்டாமைக் கொடுமைகளைப் பட்டியலெடுத்து அவற்றை சரிசெய்ய வேண்டுமென்று, 21.05.11 அன்று கோவை.இராமகிருஷ்ணன் தலைமையில் அன்னூரில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியிருந்தது பெரியார் திராவிடர் கழகம். அதில் குருக்கிளையாம்பாளையம் கிராமத்தில் பொதுக்குழாயில் தண்ணீர் பிடிக்க தீண்டாமைக் கொடுமை நிலவுவதாகச் சுட்டிக்காட்டியிருந்தனர். அதில் குறிப்பிட்டதைப் போலவே 12.06.2011 அன்று குருக்கிளையாம்பாளையத்தில் பொதுக்குழாயில் குடிநீர் பிடிக்கச் சென்ற வசந்தகுமார் என்ற மாணவனை, அங்கிருந்த ஆதிக்க ஜாதியினர் சிலர் தடுத்து தாக்கி அனுப்பினர். அடுத்த ஒரு மணி நேரத்தில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் திரண்டு அன்னூர் - மேட்டுப்பாளையம் சாலையை மறித்தனர். காவல் நிலையத்தில் நள்ளிரவு ஒரு மணி வரை போராடி வன்கொடுமை தடுப்புச்சட்டத்தில் வழக்குப்பதிவு செய்தனர்.

சுற்றுப்புற கிராமங்கள் அனைத்திலும் நிலவிய தீண்டாமைக் கொடுமைகளைப் பட்டியலெடுத்து பெரியார் திராவிடர் கழகம் சார்பில், மறுநாள் காலையில் கோவை மாவட்ட ஆட்சியரிடம் புகார் மனு அளித்தனர். அப்போது புதிதாக அமைந்திருந்த அ.தி.மு.க. அரசு சிறுவனைத் தாக்கியவர்களைக் கைது செய்யவில்லை. தீண்டாமைக் கொடுமைகளைத் தீர்க்கவும் முனையவில்லை.

இதையடுத்து, 27.06.2011, அன்று கொளத்தூர் மணி தலைமையில் ஆயிரம் குடங்களுடன் தண்ணீர் பிடிக்கும் போராட்டத்தில் இறங்கியது பெரியார் திராவிடர் கழகம். வசந்தகுமாரையும் அவரின் தாயாரையும் அதே குழாயில் தண்ணீர் பிடிக்க வைத்துவிட்டே அங்கிருந்து வெளியேறினார் கொளத்தூர் மணி. ஒட்டுமொத்த தாழ்த்தப்பட்ட மக்களும் அவர்களுக்குப் பின்னால் அணிவகுத்து தண்ணீர் பிடித்தனர். ஒரு நூற்றாண்டு இழிவு ஒரு நொடியில் துடைத்தெறியப்பட்டது. அதற்கான விதையாக நல்லிசெட்டிபாளையம் பெரியார் நகரில் முளைத்த பகுத்தறிவுச் சிந்தனையும் சுயமரியாதை உணர்வும் இருந்தன.

தமிழ்நாட்டு ஊடகங்களைத் தாண்டி அகில இந்திய ஊடகங்கள் வரை செய்தியாகிக் கவனம்பெற்ற போராட்டமாக மாறியது. குருக்குளையாம்பாளையத்தில் நடைபெற்ற பொதுக்குழாயில் தண்ணீர் எடுக்கும் போராட்டம். அதன் வெற்றி காரணமாக அன்னூர் சுற்றுவட்டாரப் பகுதிகளில் பரவலாக நிலவிய தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிராகத் துணிச்சலோடு செயலாற்றத் தொடங்கியது பெரியார் திராவிடர் கழகம். குறிப்பாக இரட்டைக்குவளை முறை மட்டுமல்ல, தாழ்த்தப்பட்ட மக்கள் தேநீர் குடித்த டம்ளர்களை அவர்களேதான் கழுவி வைக்க வேண்டுமென்ற நிலைமையும் அங்கு இருந்தது. அதேபோல, நல்லிசெட்டிபாளையத்தில் இருந்து 15 கி.மீ தொலைவில் உள்ள ஊர் அக்கரை செங்கப்பள்ளி கிராமம். அங்கு சலூன் கடையில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு முடிவெட்ட அனுமதி மறுக்கும் அவலம் இருந்தது. இப்படி அன்னூர் முழுவதும் பல்வேறு கிராமங்களில் வித விதமான ஜாதி ஆதிக்கம் நடைமுறையில் இருந்தது.

நல்லிசெட்டிபாளையத்தில் உருவான பெரியார் படை, இந்த ஜாதி ஆதிக்கங்களை ஒவ்வொன்றாகத் தவிடுபொடியாக்கியது. இப்போது சுற்றுப்புற கிராமங்களில் எங்கும் இரட்டை டம்ளர் முறை நடைமுறையில் இல்லை. **‘தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முடிவெட்ட மாட்டோம்; தண்ணீர் தர மாட்டோம் என்று சொல்ல எவருக்கும் துணிச்சல் இல்லை’** அதே வேளையில், இன்றும் நடைமுறையில் இருக்கும் இரட்டைச் சுடுகாடு முறைக்கு எதிராகப் போராட்டம் தொடர்ந்து கொண்டிருக்கிறது. 2013-ஆம் ஆண்டில், தந்தைப் பெரியார் திராவிடர் கழகம் சார்பில் நல்லிசெட்டிபாளையத்தில் ஒன்றரை சென்ட் நிலம் வாங்கி, பெரியார் இளைஞர் நற்பணி மன்றம் ஒன்றைத் தொடங்கினர். அந்த இடத்தில் தந்தை பெரியார் படிப்பகம் ஒன்றை அமைத்துள்ளனர். அங்கு குழந்தைகளுக்கு டியூஷன், போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சிகளை அளிக்கத் திட்டமிட்டுள்ளனர்.

பெண்களை இடுகாட்டிற்கே அழைத்துச் செல்ல மறுக்கும் பொதுச்சமூகத்தின் பிற்போக்குச் சூழலுக்கு மத்தியில், நல்லிசெட்டிபாளையத்தில் எவரேனும் இறந்தால் பெண்களே அவர்களின் உடல்களைச் சுமந்துசென்று சுடுகாட்டில் அடக்கம் செய்யும் வழக்கத்தைத் தொடங்கிவைத்திருக்கிறது தந்தை பெரியார் திராவிடர் கழகம். ஊரில் கோயில் விழாக்கள் நடைபெற்றாலும், 10-ஆண்டுகளாக அங்கு நடைபெறும் தமிழர் திருநாள் - பொங்கல் விழாக்கள்தான் முதன்மையானவை. தனித்தமிழில் பெயர் சூட்டும் கலாச்சாரமும் பெரியார் தொண்டர்களால் அங்கு உருவாகியிருக்கிறது.

ஒரு நூற்றாண்டாகச் சுமந்துவந்த சமூக அநீதிகளை 20-ஆண்டுகளில் உதறித் தள்ளியிருக்கிறார்கள் நல்லிசெட்டிபாளையம் தாழ்த்தப்பட்ட மக்கள். அந்தத் துணிச்சலின் முகவரியாக இருந்திருக்கிறார் பெரியார். அதனால் ஊரின் ஒரு பகுதிக்கு பெரியார் பெயரைச் சூட்டி, தற்போது பெரியார் சிலையையும் அம்பேத்கர் சிலையோடு சேர்த்து வைக்க ஆயத்தமாகியிருக்கிறது தந்தை பெரியார் திராவிடர் கழகம். ஆறடியில் உயர்ந்து நிற்கப்போகும் பெரியார், அம்பேத்கர் சிலைகள் காலத்துக்கும் சொல்லப் போகிறது, தீண்டாமைக் கொடுமைகளை ஒழித்த வரலாற்றை; ஜாதி ஒழிப்புக்கான வழியை.

## எல்லா கொள்கைகளையும் செயல்படுத்துகிறார் மோடி- ஆர்.எஸ்.எஸ் பாராட்டு!

‘ஆர்.எஸ்.எஸ் விழுமியங்களை தனக்கே உரிய பாணியில் பொதுமக்களிடம் கொண்டு செல்லும் பிரதமர் நரேந்திர மோடி, அதன் மிகச் சிறந்த பிரதிநிதியாகவும் திகழ்கிறார்’ என, அந்த அமைப்பின் பொதுச்செயலர் தத்தாத்ரேய ஹொசபலே புகழாரம் சூட்டியுள்ளார். ஆர்.எஸ்.எஸ்., அமைப்பின் பொதுச்செயலராக உள்ள தத்தாத்ரேய ஹொசபலே, அமெரிக்கா சென்றுள்ளார். வாஷிங்டனில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்ற அவர், செய்தியாளர்களிடம் கூறியதாவது: சமூக நல்லிணக்கம், காலனித்துவ ஆதிக்க மனப்பான்மையில் இருந்து விடுதலை, குடும்ப விழுமியங்களை வலுப்படுத்தல், சமூக நல்லொழுக்கம் மற்றும் நிலையான வளர்ச்சி திட்டங்கள் ஆகிய ஐந்து அம்சங்களை, அடுத்த 25 ஆண்டுகளுக்கான இலக்காக ஆர்.எஸ்.எஸ்., நிர்ணயித்துள்ளது. இந்த இலக்குகளை நோக்கி பிரதமர் மோடி சிறப்பாக செயல்பட்டு வருகிறார்.



ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் அதே வார்த்தைகளை பிரதமர் பயன்படுத்தாமல் இருக்கலாம். ஆனால், தனக்கே உரிய தனித்துவ பாணியில் ஆர். எஸ்.எஸ், கருத்துக்களை அவர் செயல்படுத்தி வருகிறார். உதாரணமாக, ஒவ்வொருவரும் மரம் நட வேண்டும் என நாங்கள் சொல்கிறோம். பிரதமரோ, ’தாயின் பெயரில் ஒரு மரம் நடுங்கள்’ என கூறி, இதனை நெகிழ்ச்சியான இயக்கமாக மாற்றுகிறார். சிறந்த பிரதிநிதி மத்திய அரசின் சுயசார்பு இந்தியா திட்டம், 2022ல் நடந்த சுதந்திர தின விழா உரையின் போதும், பிரதமர் குறிப்பிட்ட ஐந்து உறுதிமொழிகள் ஆர்.எஸ்.எஸ்., கொள்கையின் பிரதிபலிப்புகள் தான்.

ஜனநாயக நாட்டில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமராக , இருந்தாலும் தன் கலாசார வேர்களை அவர் மறக்கவில்லை. ஆர்.எஸ். எஸ்., அமைப்பின் நோக்கங்களையும் நன்கு உணர்ந்து இருக்கிறார். அந்த அமைப்பின் மிகச் சிறந்த பிரதிநிதியாக செயல்படுகிறார். கடந்த, 1980ல் பா.ஜ., உருவான காலத்தில் இருந்தே, ஆர்.எஸ்.எஸ்., அமைப்புடன் அதற்கு இருக்கும் தொப்புள் கொடி உறவு மாறாமல் இருக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

## திமுகவை அழிக்க விஜய் கட்சி யாகம்!

தமிழக வெற்றி கழகம் சார்பில், திருச்செந்தூர் முருகன் கோவிலில் தவெக சார்பாக ‘சத்ரு சம்ஹார’ யாகம் நடத்தப்பட்டது. இதுகுறித்து, த.வெ.க., வட்டாரங்கள் கூறியதாவது: விஜய் இந்து மதச் சடங்குகள் மீது அதீத நம்பிக்கை கொண்டவர். தான் தொடங்கும் எல்லா விஷயங்களையும் ஜோதிடரிடம் ஆலோசனை பெற்று, அவர் குறித்து கொடுக்கும் நேரத்தில் தான் செய்வார். கட்சி தொடங்கியதில் இருந்து, ஜோதிடரின் அனுமதி இல்லாமல் விஜய் எதையுமே செய்தது இல்லை. அதனால்தான், கட்சி தொடங்கி இரண்டு ஆண்டுகளில், இவ்வளவு பெரிய இடத்துக்கு விஜய் வளர்ந்து உள்ளார்.



இந்நிலையில், சட்டசபை தேர்தலில் மிகப்பெரிய வெற்றி பெறவும், அரசியல் எதிரிகளை வீழ்த்தவும் சில சடங்குகளை செய்ய வேண்டும் என ஜோதிடர் ஆலோசனை கூறியதை அடுத்து, விஜய் அதற்காக திட்டமிட்டார். அதன்படி, திருச்செந்தூர் முருகன் கோவிலில், இன்று சத்ரு சம்ஹார யாகம் நடத்த உள்ளார். விஜய் சார்பாக, த.வெ.க., பொதுச்செயலர் ஆனந்த் இந்த யாகத்தை செய்ய உள்ளார். விஜய்க்கு நெருக்கமான சிலரும் இந்த யாகத்தில் பங்கேற்க உள்ளனர். இவ்வாறு அந்த வட்டாரங்கள் கூறின. எதிரிகளை அழிப்பதற்கு நடத்தப்படும் ‘சத்ரு சம்ஹார” யாகம். இப்போது திமுகவை அழிக்க விஜய் வேதமந்திரங்களோடு யாகம் நடத்துகிறார்.

**தமிழெனும் ஆயுதமேந்தி இனமானம் உரைத்த பாவேந்தர் புகழ் வாழியவே!**

**தமிழின் இனிமையையும் தமிழரின் உயர்வுக்கான வழியையும் தன் கவிதையால் காட்டியவர் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்.**

**பாவேந்தரின் திண்மை நிறை தமிழ், ஒளியென நம் இனத்திற்குத் துணை நிற்கட்டும்!**

**- மு.க ஸ்டாலின்**



Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
Date Of Publication - Every Thursday Tamil Weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 Licenced To Post Wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
Puratchi Periyar Muzhakkam Registered With The Registrar Of Newspaper For India Under no.tntam/2002/07776

# மாநில அளவிலான கராத்தே போட்டி!

என்சியன்ட் சோடா கான் கராத்தே நடத்திய மாநில அளவிலான கராத்தே போட்டி 01.03.2026 ஞாயிறு அன்று காலை 10 மணியளவில் சேலம் மாவட்டம், ஓமலூர் முன்சீப் கந்தசாமி திருமண மண்டபத்தில் நடைபெற்றது.ஏன்சியன்ட சோட்டாகான் கராத்தே - டோ துணை தலைவர் சிவ மகேந்திரன் (எ) குட்டி தலைமை வகித்தார். ஏன்சியன்ட சோட்டாகான் கராத்தே - டோ பொதுச்செயலாளர், தலைமை பயிற்சியாளர் கோ. சிவபெருமாள், ஜே.டி.எஸ். சரவணன் மூர்த்தி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து கராத்தே வீரர்கள், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர், தமிழ்நாடு கிக் பாக்சிங் அசோசியேசன் தலைவருமான கொளத்தூர் மணி சிறப்புரையாற்றி, போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பதக்கங்கள் மற்றும் சான்றிதழ் வழங்கினார். சட்டமன்ற உறுப்பினர் ஆர். மணி, சவுத் இந்தியன் பள்ளி தாளாளர் சௌந்தர்ராஜன், நார்த்பாக் பள்ளி தாளாளர் முத்து, சுவாமி மெட்ரிக் பள்ளி தாளாளர் கஞ்சமலை மற்றும் பொருளாளர் கோவிந்த ரெட்டி, பத்மாவாணி கல்லூரி நிர்வாக அலுவலர் முத்துக்குமார் கராத்தே வீரர்களுக்கு பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கினர். சிறப்பு விருந்தினராக எஸ். எஸ். கே. ஆர் ராஜேந்திரன், சேர்மன், மாதேஷ் சந்திரன் (ஓம் சக்தி ஜுவல்லர்ஸ்), எஸ்.ஆர் தளபதி (கவுன்சிலர்) ஆகியோர் கலந்துகொண்டனர். சக்திவேல், ராஜதுரை, பிரேமா, கார்த்தி, அருண்குமார், பூபாலன், திரிஷால், சந்துரு, பிரேம்குமார் ஆகியோர் பயிற்சியாளராகவும் மற்றும் நடுவர்களாக இருந்தனர்.

இப்போட்டியில் கராத்தே வீரர்கள் பிரகாஷ், துரை, சசிக்குமார் மூவருக்கும் ஏன்சியன்ட சோட்டாகான் கராத்தே - டோ பொதுச்செயலாளர், தலைமை பயிற்சியாளர் கோ. சிவபெருமாள் பிளாக் பெல்ட் வழங்கினார். போட்டியினை என் செல்வகுமார் ஒருங்கிணைத்தார். எல்.ஐ.சி தனசேகரன் நன்றியுரையாற்றினார்.

# பேரறிவாளன், அன்பு தனசேகர் வழக்கறிஞர்களாக பதிவு!



தோழர் பேரறிவாளன் மற்றும் கழகத் தலைமைக் குழு உறுப்பினர் கு. அன்பு தனசேகர் ஆகியோர் ஏப்ரல்-27 அன்று வழக்கறிஞர்களாக பதிவு செய்து கொண்டனர்.

மகிழ்வாக, இராயப்பேட்டை பத்ரி நாரயணன் நினைவு படிப்பகத்துக்கு வந்து, பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். அவர்களை திவிக, திமுக, விசிக தோழர்கள் வரவேற்றனர்! தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி, மாவட்டத் தலைவர் வேழவேந்தன், திமுக வட்டச் செயலாளர் ஆர்.என் துரை, திருவல்லிகேணி பகுதி பொறுப்பாளர்கள் கோபிநாத, ராஜேஷ், சூர்யா மற்றும் கழகத் தோழர்கள் பிரகாஷ் மாஸ்டர், இனியவன் அசோக், எழுத்தாளர் சரவணக்குமார், ஊடகவியலாளர் கவின் மலர் ஆகியோர் உடன் இருந்தனர்.

# நங்கவள்ளியில் கழகத் தோழர்கள் சந்திப்பு!

நங்கவள்ளியில் 22.03.2026 ஞாயிறு மாலை 6.00 மணியளவில் சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணன் இல்லத்தில் கழகத் தோழர்கள், இளைஞர்கள் சந்திப்பு நடைபெற்றது. சந்திப்பில் "தொடரட்டும் தமிழ்நாட்டில் சாதனைகள்" திமுக ஆட்சியை உறுதி செய்வோம்.. மதவெறி கூட்டணியை விரட்டி அடிப்போம் என்கிற தலைப்பில் நடைபெற்ற தெருமுனைக் கூட்டங்களின் நிறை குறை குறித்தும், வரவு செலவு குறித்தும் விவாதிக்கப்பட்டது.



முதல் கட்ட பரப்புரை நிறைவடைந்த நிலையில் இரண்டாம் கட்ட பரப்புரைக்கான திட்டம் குறித்தும் இதில் ஆலோசிக்கப்பட்டது. அடுத்தக்கட்ட வேலைத் திட்டங்களாக இதுவரை கூட்டங்கள் நடைபெறாத இடங்களாக தேர்வு செய்து (வாரம் 2 கூட்டங்கள்) கிராமப்புற பிரச்சாரங்கள் நடத்துவது எனவும், 2026 சட்டமன்ற தேர்தல் முடிந்த உடன் நூல் திறனாய்வும், பயிற்சி வகுப்புகளும், வாசகர் வட்டமும் நடத்தலாம் என தோழர்கள் ஆலோசனை வழங்கினர்.

சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணன், நங்கவள்ளி நகரச் செயலாளர் சந்திரசேகரன், வனவாசி நகரச் செயலாளர் உமாசங்கர், சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் தங்கதுரை, சேலம் மாவட்ட இளைஞர் அணிச் செயலாளர் பிரபாகரன், சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சிவசண்முகம், தமிழ்நாடு மாணவர் கழக சேலம் மாவட்ட அமைப்பாளர்கள் நாகராஜ், கவியரசு, கொங்கனாபுரம் கோகுல், மேச்சேரி சபரி, தமிழருவி, பேரறிவாளன், நிலவன், புகழேந்தி, பெரிய சோரகை ஆனந்த் ஆகியோர் கலந்து கொண்டனர். தோழர்கள் அனைவருக்கும் இரவு உணவு தோழர் லலிதா ஏற்பாடு செய்திருந்தார்.

# "வாழ்" குறும்பட சிறப்புக்காட்சி பார்வையிடல்!

கழகத் தலைவர் கொளத்தூர் மணி 29.03.2026 அன்று சென்னை, அண்ணாமலை காலனி, சத்தியமூர்த்தி தெருவில் உள்ள டிவி ஸ்டுடியோவில் "வாழ்" குறும்படத்தின் சிறப்புக் காட்சியை பார்வையிட்டு குறும்பட குழுவிற்கு வாழ்த்துகளை தெரிவித்தார்.




தாய் தந்தை தமிழ் படைப்பகம் மற்றும் JOKERKING'S PRODUCTION - NILOFER NISHA இணைந்து வழங்கும் "வாழ்" குறும்படம், இயக்குநர் ஆர். சமீர் அவர்களின் சிந்தனையிலும் சமூகப் பொறுப்புணர்விலும் உருவான ஓர் அர்த்தமிக்க படைப்பு. இந்த குறும்படத்தின் உருவாக்கத்தில் பங்களித்த கலைஞர்கள்: ஒளிப்பதிவாளர் சித்தார்த் தமிழ் செல்வன், இசை அமைப்பாளர் அபிஷேக் வாசகன், படத்தொகுப்பாளர் அசோக் சார்லஸ், வசனம் அருணகிரி மற்றும் இயக்குநர் சமீர்.

"சாவதற்கு ஆயிரம் வழிகள் இருக்கும்போது, வாழ்வதற்கு ஒரு வழியும் இல்லையா?" என்ற தாக்கமிக்க வசனம், இந்த குறும்படத்தை கண்ட ஒவ்வொருவரின் மனதையும் உலுக்கியது. சமூக அவலங்களையும் மனஅழுத்தங்களையும் எதிர்கொள்ளும் இன்றைய தலைமுறைக்கு உரியவர்களிடம் உரையாடலே தீர்வாக அமையும் என்ற அழகான செய்தியை இக்குறும்படம் வலியுறுத்துகிறது. இயக்குநர் ஆர். சமீர் சமூகத்தை தொலைநோக்குப் பார்வையில் அணுகி, தற்கொலை என்பது தீர்வு அல்ல; உரையாடலே தீர்வு என்ற வலுவான கருத்தை முன்வைத்துள்ளார். இதுவே இக்குறும்படத்தின் மைய நோக்கமாக திகழ்கிறது. இது ஒரு குறும்படம் மட்டுமல்ல! வாழ்வை தேர்வு செய்ய அழைக்கும் சமூகப் பொறுப்புள்ள குரல்!

# பெயர் சூட்டு விழா!

கழகத் தோழர் அருண்பாண்டியன்-குமுதா ஆகியோரின் ஆண் குழந்தைக்கு 05.04.2026 ஞாயிற்றுக்கிழமை சேலம் குரங்குச்சாவடி பகுதியில் உள்ள அவரது இல்லத்தில் பெயர் சூட்டும் விழா நடைபெற்றது.



கழகத் தலைவர் கொளத்தூர் மணி, அருண்பாண்டியன் - அமுதா ஆகியோரின் ஆண் குழந்தைக்கு "தமிழ்சமரன்" என பெயர் சூட்டி மகிழ்ந்தார். பிறந்தநாள் மகிழ்வாக ரூ.2000 பெரியார் முழக்க வளர்ச்சி நிதியாக தந்துள்ளனர்.

சக்திவேல்( கிழக்கு மாவட்டத் தலைவர்), டேவிட் (கிழக்கு மாவட்டச் செயலாளர்), கிருஷ்ணன் ( மாவட்ட ஒருங்கிணைப்பாளர்), மாவட்ட அமைப்பாளர்கள் அன்பு, பெருமாள், தேவபிரகாஷ் (மாவட்ட இளைஞரணி தலைவர்), பிரபாகரன் (மாவட்ட இளைஞரணி செயலாளர்), தங்கதுரை (மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்), தேவராஜ் (சேலம் மாநகர அமைப்பாளர்), ராஜேந்திரன் (நங்கவள்ளி ஒன்றிய அமைப்பாளர்), கார்த்தி (ஏற்காடு ஒன்றியப் பொறுப்பாளர்), பிரபு (சேலம் மாநகர பொருளாளர்), லோகநாதன், அவினாசி, செய்தியாளர் கோகுல், தீபா, யாழினி, முத்துராஜ், இந்திராணி, ஈழ பிரபாகரன், ஆனந்த், கார்த்திகேயன், முரளி ஆகிய தோழர்கள் கலந்துகொண்டு வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.

# வாசகர் கடிதம்

**கடந்த ஒரு மாதங்களாக வருகின்ற புரட்சிப் பெரியார் முழக்கங்கள் எல்லாம் வண்ணப் புகைப்படங்களோடு வந்து கொண்டிருக்கிறது. 1973-ல் பெரியாருக்கு பிரச்சார வாகனம் அளிக்கப்பட்டது குறித்து செய்திகள் படிப்பதற்கு களத்தில் நாங்கள் நிற்பதைப் போல் இருந்தது.**

**அதே போல் தலையங்கத்தில் சட்டத்தின் ஆட்சியா? பார்ப்பன ஆட்சியா? என்று அந்த செய்தியை எவ்வளவு அயோக்கியத்தனமாக இந்த பார்ப்பனர்கள் செய்கிறார்கள் என்பதை தெளிவாக எடுத்துக் காட்டியது. டெல்லிக்கு எதிரான போராட்டங்களின் முதல் வெற்றி என்ற தலைப்பில் எழுதப்பட்ட செய்தியும், உலகிலேயே குடும்பத் தலைவிகளின் உழைப்புக்கு ஊதியம் வழங்கிய ஒரே ஆட்சி தமிழ்நாடு தான் என்ற செய்தி மிகவும் சிறப்பானது. திராவிட மாடல் ஆட்சி நாயகன் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை பெரியார் முழக்கத்துடன் நாங்களும் பாராட்டி மகிழ்கிறோம்.**

**மு.சாமிநாதன்**
**(நாமக்கல் மாவட்டத் தலைவர், திவிக)**

# கழக வளர்ச்சி நிதி

**மயிலாடுதுறை மாவட்டக் கழகம் சார்பில் ரூ.25,000 கழக வளர்ச்சி நிதியாக தோழர்கள் தந்துள்ளனர்** **நன்றியுடன் பெற்றுக்கொண்டோம்.**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : April 30, 2026

Owned and Published By : K. Rajendran, From 29, Journalists Colony, Thiruvalluvar Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041. Ph : +91 63697 76351
and Printed By : S. Theesmas, at Lilly Soosai Offset, New No.8, Old No.12/1, Mohammed Usain Lane, Royapettah, Chennai - 600 014.
Editor :K. Rajendran